Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
THURSDAY, JULY 27, 2023

வியாழக்கிழமை 27, ஜூலை 2023 | ஒளி: 09 கதிர்: 048 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# 4 முதல் “யாழ் நிலா”

கல்கிசையில் இருந்து காங்கேசன்துறை வரை அடுத்த மாதம் 4 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ள சொகுசு ரயிலுக்கு பெயர் யாழ்_நிலா. இதற்கான முதலாம் வகுப்பு கட்டணம் 4000 ரூபாவும் இரண்டாம் வகுப்பு கட்டணமாக 3000 ரூபாவும் மூன்றாம் வகுப்பு கட்டணமாக 2000 ரூபாவும் அறவிடப்பட்டும்.

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை நிறுத்து தீர்மானம்

ஜனாதிபதி சிறப்புரிமைச் சட்டத்தின் பிரகாரம், முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு ஓய்வூதியம், வீடு, மூன்று வாகனங்கள், எரிபொருள் மற்றும் தனிப்பட்ட செயலாளர் ஆகியவையே உரித்துடையவை.

ஆனால் கடந்த காலங்களில் தண்ணீர் கட்டணம், மின்சார கட்டணம் செலுத்துதல் உள்ளிட்ட பல சலுகைகள் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளின் கீழ் இணைக்கப்பட்டன.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை கேள்விக்கு உட்படுத்தி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பில் ஜனாதிபதி செயற்படும் சிறப்புரிமைகள் சட்டத்தின் பிரகாரம் செயற்படுமாறு அரசாங்கத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, இனிமேல் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சலுகைகளை வழங்கும் போது, ஜனாதிபதி சிறப்புரிமை சட்டத்துக்கு புறம்பாக வழங்கப்பட்டுள்ள சலுகைகளை குறைக்க வேண்டும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.



## பிறந்தநாள் கொண்டாட்ட களேபர விவகாரம்

# வெட்டுக்காயங்களுக்கு உள்ளான கணவன் மரணம்



பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது, இனந்தெரியாத குழுவொன்று வீடு புகுந்து, பெட்ரோல் குண்டை வீசி, தீ மூட்டி கொளுத்தி, நடத்திய வாள்வெட்டு மற்றும் குண்டாந்தடி தாக்குதல் சம்பவத்தில் , பெண்ணொருவர் உயிரிழந்ததுடன், காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த அவரின் கணவரும் புதன்கிழமை (26) உயிரிழந்துள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான சுகந்தன் (வயது 33) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தீக்காயங்களுக்கு உள்ளாகி வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மேலதிக சிகிச்சைக்காக அவரது உறவினர்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் செவ்வாய்க்கிழமை (25) அனுமதித்த போதும் அவர் சிகிச்சைப் பலனின்றி புதன்கிழமை (26) அதிகாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## கனேடியப் பிரதமரின் கூற்றை

# நிராகரித்தது அரசாங்கம்




கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 2023 ஜூலை 23ஆந் திகதி வெளியிட்ட அறிக்கையில், தமிழ் இனப்படுகொலை நினைவு தினம் தொடர்பாக மேற்கொண்ட குறிப்பை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு முற்றாக நிராகரிக்கின்றது.

இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற மோதல்கள் குறித்த தவறான, திரிபுபடுத்தப்பட்ட கதையை கனடா தொடர்ந்தும் குறிப்பிடுவதானது, உள்நாட்டு வாக்கு வங்கித் தேர்தல் ஆதாயங்களை மட்டுமே இலக்காகக் கொண்டதாக அமைவதுடன், இது பரந்த இன நல்லிணக்க இலக்குகளுக்கு உகந்ததாக மாட்டாது.

தொடர்ச்சி P2

# இந்தியாவிடம் உதவி கோரியது ஐ.எம்.எப்



அரிசி ஏற்றுமதித் தடையை நீக்குமாறு சர்வதேச நாணய நிதியம்(IMF) இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவின் வட மாநிலங்களில் அண்மைக்காலமாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக அங்கு நெல் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தியாவில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் விதமாக மத்திய அரசு, பாஸ்மதி அல்லாத அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளது.

இதனால் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேயா உள்ளிட்ட உலக நாடுகளில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு அதன் விலையும் உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சூப்பர் மார்க்கெட்டுகளில் அரிசி வாங்க மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

தொடர்ச்சி P2

# சீனாவின் வெளிவிவகார அமைச்சர் Qin Gang பதவி நீக்கம்



வெளிவிவகார அமைச்சராக கடந்த மார்ச் 12ஆம் திகதி பொறுப்பேற்ற Qin Gang, கடுமையான வெளியுறவுக் கொள்கைகளை வலியுறுத்துபவர் என்று கூறப்படுகிறது.

இதனால், அவருக்கும் அதிபர் Xi Jinping-க்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

கடந்த ஒரு மாதமாகவே முக்கிய நிகழ்ச்சிகளில் Qin Gang ஓரம் கட்டப்படுவதாக செய்திகள் வெளியாகி வந்த நிலையில், வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து அவர் விலக்கப்படுவதாகவும், அவருக்குப் பதிலாக ஏற்கெனவே வெளிவிவகார அமைச்சராக இருந்த Wang Yi நியமிக்கப்படுவதாகவும் செவ்வாய்க்கிழமை (25) அறிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# 12 நாடுகளின் இராஜதந்திரிகளுடன் எதிர்க்கட்சி குழுவினர் சந்திப்பு



12 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்களுடன் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட குழுவினருடன் விசேட கலந்துரையாடலொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமை கொழும்பில் செவ்வாய்க்கிழமை (25) மாலை இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு விசேட விடயங்கள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டதுடன் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துதல்,அரசியலமைப்பைப் பாதுகாத்தல் மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துதல் போன்ற விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

அரசாங்கத்தின் ஜனநாயகத்தின் அப்பட்டமான மீறல் போலவே மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் அரசின் திறமையின்மை,ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையை முறையாக செயல்படுத்தாதது மற்றும் சட்டத்துறையில் எழுந்துள்ள பல பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ச்சி P2

# காணியை சுவீகரிக்கும் முயற்சி மூன்றாவது நாளாக தடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கில் முன்னெடுக்கப்படவிருந்த காணி சுவீகரிப்பு நடவடிக்கை மூன்றாவது நாளாக, புதன்கிழமை (26) தடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு - உடுத்துறை 10 ஆம் வட்டாரத்தில் உள்ள தனியாருக்கு சொந்தமான காணியை சுவீகரிப்பதற்கான நடவடிக்கையே முன்னெடுக்கப்படவிருந்தது.

குறித்த பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் காணியில் 15 பேர்ச் அளவில் கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடற்படை முகாம் அமைந்திருக்கும் ஒன்றரை பரப்பு காணியை கடற்படையினருக்கு நிரந்தரமாகவே சுவீகரிப்பதற்கான அளவீட்டு பணிக்காக அரச நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் சென்றிருந்தனர்.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதி ஒளிந்து கொண்டிருக்கிறார்



அரசமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஜனாதிபதி ஒளிந்துக் கொண்டிருக்கிறார் என்று ஜே.வி.பியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

“ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற காலத்திலிருந்து, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் மக்கள் மத்தியில் பொதுக்கூட்டமொன்றைக்கூட நடத்தி நாம் காணவில்லை மக்கள் ஆணையால் ஆட்சிக்கு வராத அவர், அரசமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒளிந்துக் கொண்டிருக்கிறார் என்றார்.

தொடர்ச்சி P2

# புதிய தலைவர்



சர்வதேச சமாதான மாநாட்டின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செவ்வாய்க்கிழமை (25) இரவு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

# விபத்துகளை தடுக்க தகைமை இழப்பு புள்ளி



விபத்துகளை தடுக்கும் வகையில் தகைமை இழப்பு புள்ளி செயல்முறையை நடைமுறைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லஸந்த அழகியவன்ன குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லஸந்த அழகியவன்ன இதனைத் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மெலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

# சீனாவின் நிதி உதவியில் மல்வத்து ஓயா திட்டம்

## சாள்ஸ் எம்.பி தெரிவிப்பு

க. அகரன்



மல்வத்து ஓயா திட்டமானது சீனாவின் நிதி உதவியில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை (26) இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


தொடர்ச்சி P2

# லிந்துலையில் 10 வீடுகள் தீயில் எரிந்து நாசம்

மலையக நிருபர்கள்







லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லிந்துலை - இராணிவத்தை தோட்டத்தின் செவ்வாய்க்கிழமை (25) ஏற்பட்ட தீ விபத்தால் 20 அறைகளைக்கொண்ட லயன் குடியிருப்பில் 10 வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளது. மேலும், சில வீடுகள் பகுதியளவில் சேதமமைந்துள்ளனது. இதனால் இந்த குடும்பங்களை சேர்ந்த 56 இற்கும் மேற்பட்டோர் நிர்க்கதியாகியுள்ளனர்.

குறித்த லயன் குடியிருப்பில் செவ்வாய்க்கிழமை (25) இரவு திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து மக்கள் கூச்சலிட்டுக்கொண்டு வெளியில் வந்தனர். அதற்குள் தீ வேகமாக பரவியது. பரவிய தீயை அதே தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பிரதேசவாசிகள், லிந்துலை பொலிஸாருடன் இணைந்து சுமார் இரண்டு மணித்தியாலயங்களுக்கு பிறகு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கனேடியப் பிரதமரின் கூற்றை

# நிராகரித்தது அரசாங்கம்



இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அனைத்து சமூகங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் பாரம்பரியத்தைக் கொண்ட சமூகங்கள் மத்தியில் ஸ்திரத்தன்மை, முன்னேற்றம், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் முயற்சிகளில் இலங்கைக்கு ஆதரவளிக்குமாறு கனடா மற்றும் அதன் தலைவர்களை இலங்கை கேட்டுக்கொள்கின்றது என்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, புதன்கிழமை (26) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெட்டுக்காயங்களுக்கு உள்ளான கணவன் மரணம்




கடந்த 23ஆம் திகதி நள்ளிரவு 12.30 மணியளவில் பிறந்தநாள் விழா நடைபெற்ற வீட்டிற்குள் நுழைந்த 8 பேர், அங்கிருந்த சிறுவர்கள் உட்பட அனைவரையும் கூரிய ஆயுதங்களால் தாக்கியிருந்தனர்.

பின்னர் வீட்டை தீயிட்டுக் கொளுத்தியதில் சுகந்தனின் மனைவியான 22 வயதுடைய பாத்திமா சம்மா சப்தீர் என்ற பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

முகமூடி அணிந்த குழுவொன்று வீட்டுக்கு தீ வைத்துள்ளதாக சிசிடிவி காட்சிகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும், அவர்களை கைது செய்ய பல குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

## சீனாவின் வெளிவிவகார அமைச்சர் Qin Gang பதவி நீக்கம்



இருதரப்பு நல்லுறவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் (Antony Blinken) உள்ளிட்டோர் சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டு, நாடு திரும்பியுள்ள நிலையில், Qin Gang பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## 12 நாடுகளின் இராஜதந்திரிகளுடன் எதிர்க்கட்சி குழுவினர் சந்திப்பு



ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் திருமதி Julie J Chung, நெதர்லாந்தின் தூதுவர் திருபதி Bonnie Horbach, இந்தியா உயர்ஸ்தானிகர் Gopal Baglay, நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் Michael Appleton, ஆஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் Paul Wesley Stephens, பிரான்ஸ் தூதுவர் Jean Francois Pactet, கனேடிய உயர்ஸ்தானிகர் Eric Walsh, ஐக்கிய இராச்சியத்தின் பதில் பிரதி உயர்ஸ்தானிகர் Lisa Whanstall, ரோமானிய தூதுவர் Victor Chiujdea, ஜப்பானிய பிரதி தூதுக்குழுவின் பிரதானி Katsuki Kotaro, இத்தாலிய பிரதி தூதுக்குழுவின் பிரதானி Dr. Francesco Perale, ஐரோப்பிய ஒன்றிய அரசியல் விவகாரப் பிரிவின் Anne Vaugier Chatterjee ஆகியோர் இதில் பங்கேற்றிருந்தனர்.

எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர் முன்னிலையில் உரையாற்றியதுடன் நாடு எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் விளக்கமளித்தார்.

வேண்டுமென்றே தேர்தலை ஒத்திவைப்பதன் மூலம் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பாக தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

மக்களின் பிரச்சினைகளில் அக்கறையின்மையால் அஸ்வெசும போன்ற வேலைத்திட்டங்களும் தோல்வியடைந்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் சுகாதாரத் துறை எவ்வாறு சீர்குலைந்துள்ளது மற்றும் தரமற்ற மருந்துகளால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்தும் நினைவு கூர்ந்தார்.

ஊழலுக்கு எதிராக பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன என்றாலும், ஊழல் மோசடிகள் இன்னும் முடிவுக்கு வந்தபாடில்லை என்றும், சட்டத் துறையில் பல சிக்கல்கள் உள்ளன என்றும், சகல சட்டமூலங்களிலும் குறைபாடுகள் உள்ளதாகவும், இதனால் சட்டத்துறைக் கட்டமைப்பின் தரம் குறைந்துள்ளதாகவும் இங்கிருந்த தூதுவர்களிடம் எடுத்துரைத்தார்.

## இந்தியாவிடம் உதவி கோரியது ஐ.எம்.எப்



இந்நிலையில் குறித்த ஏற்றுமதித் தடையை நீக்குமாறு சர்வதேச நாணய நிதியம்(IMF) இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை பொருளாதார நிபுணர் பியர்-ஒலிவியர் கோரின்சாஸ் (Pierre-Olivier Gourinchas) கருத்துத் தெரிவிக்கையில் இந்தியாவின் அரிசி ஏற்றுமதி தடையால் உலகம் முழுவதும் உணவு பண்டங்களின் விலை உயரும். சில நாடுகள் எதிர்வினை நடவடிக்கைகளையும் எடுக்கலாம்.

எனவே இத்தடையை நீக்கக் கோருகிறோம். 2022-ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் இந்திய பொருளாதாரம் சற்று இறங்கி இருந்தாலும், ஒரு வலிமையான வளர்ச்சி தென்படுகிறது. எனவே இத் தடையானது தேவையற்றது" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி ஒளிந்து கொண்டிருக்கிறார்



பெல்மடுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியசாலைகளில் இன்று மருந்துத் தட்டுப்பாடு நிலவி வருகிறது. ஆனால், ஜனாதிபதியோ நாட்டின் பொருளாதாரம் உயர்வடைவதாக குறிப்பிடுகிறார்.

மத்திய வங்கியின் அறிக்கையொன்று அண்மையில் வெளியானது. இதில், 68 சதவீதமான மக்கள் இரண்டு வேளை உணவினை மட்டுமே உற்கொள்வதாக தெரிவிக்க ப்பட்டுள்ளது.

கடந்தாண்டு, கடனை திருப்பிச் செலுத்தியும் எரிபொருள், எரிவாயு இருந்ததாகக் கூறப்பட்டது.

ஆனால், இவ்வாண்டு 600 கோடி டொலர் கடனை திருப்பிச் செலுத்தப் போவதில்லை என்று கூறப்படுகிறது.

அரச சொத்துக்களை விற்பனை செய்து, அதன் ஊடாக கிடைக்கும் டொலரைக் காண்பித்து, இந்த நாடு முன்னேறி விட்டதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## காணியை சுவீகரிக்கும் முயற்சி மூன்றாவது நாளாக தடுக்கப்பட்டது

காணி உரிமையாளர், மக்கள் பிரதிநிதிகள், பொது மக்கள் இணைந்து எதிர்ப்பினை வெளிப்படுத்தியதையடுத்து, காணி அளவீட்டினை அதிகாரிகள் தற்காலிகமாக இடைநிறுத்திச் சென்றுள்ளனர்.

இதன்போது, பிரதேச மக்களுடன் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் உள்ளிட்ட பலரும் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தனர்.

## சீனாவின் நிதி உதவியில் மல்வத்து ஓயா திட்டம்

வவுனியா, வெண்கல செட்டிகுளம் பகுதியை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்படும் மல்வத்து ஓயா திட்டம் காரணமாக 55 ஏக்கர் விவசாய காணிகளுக்குரிய 33 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் இரண்டு வருடமாக பயிற் செய்கையில் ஈடுபடாமையால் நட்ட ஈடு கோரியுள்ளதாகவும் வெண்கல செட்டிகுள பிரதேச செயலாளர் சுலோஜனாவினால் தெரிவிக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு பதில் அளித்தார்.

வவுனியா, செட்டிகுளத்தை உள்ளடக்கி முன்னெடுக்கப்பட்டு வரும் மல்வத்து ஓயாத்திட்டம் தற்போது நிறுத்த ப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருடன் நான் கதைத்த போது தெரிவித்திருந்தனர். குறித்த திட்டத்திற்கு கடந்த அரசாங்கத்தால் 23000 மில்லின் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் நாட்டின் பொருளாதார நிலை காரணமாக தற்போது அந்த நிதியை பெற முடியாத நிலை உள்ளது. அதனால் எதிர்காலத்தில் சீனாவின் உதவி மூலம் அதனை செய்ய முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

500 மில்லியன் ரூபாய் நிதி கடந்த அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டு கிடைத்து உள்ளது. அதில் 200 மில்லின் செலவிற்கான வேலைகள் நிறைவடைந்துள்ளதால், அடுத்து மழை காலத்திற்கு முன்பாக 2 மாதங்களுக்குள் மிகுதி 300 மில்லின் நிதிக்குரிய வேலைத்திட்டத்தை, அப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## லிந்துலையில் 10 வீடுகள் தீயில் எரிந்து நாசம்



இந்த தீயினால் தோட்டத் தொழிலாளர்களின் தனிப்பட்ட உடமைகளும், வீடுகளில் வசித்த பிள்ளைகளின் பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

தீயினால் பாதிக்கப்பட்ட உறவினர்களி ன் வீடுகளில் தற்காலிகமாக குடியமர்த்தப்பட்டு ள்ளதாக தீ விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் இதுவரை தெரியவில்லை என தெரிவிக்கும் லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விபத்துகளை தடுக்க தகைமை இழப்பு புள்ளி

"வினைத்திறனான மற்றும் தரமான போக்குவரத்து சேவையை முன்னெடுப்பதற்காக 50 மின்சார பேரூந்துகளை பாவனையில் ஈடுபடுத்தும் 'ஈ-பேருந்து' முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்து இங்கு மின்சார பேரூந்துகளை தயாரிப்பதற்கு தற்போது அமைச்சரவைத் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், தற்போது நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மக்கள் தமது கட்டணங்களை பண அட்டை மூலம் செலுத்தக் கூடிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

பழமையான மோட்டார் வாகனச் சட்டத்தில் திருத்தம் செய்து புதிய சட்டத்தை முன்வைக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதற்காக 13 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

வாகன இறக்குமதியின்போது இடம்பெறும் பல்வேறு மோசடிகளைத் தவிர்க்க 'ஈ மோட்டரிங்' என்ற வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

இதன் ஊடாக வாகன இறக்குமதி மூலம் நாட்டுக்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம் முழுமையாக கிடைக்கும். மேலும், விபத்துகளை தடுக்கும் வகையில் தகைமை இழப்பு புள்ளி செயல்முறையை நடைமுறைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வீதிகளில் இடம்பெறும் தவறுகளுக்கு குறித்த வீதியிலே அபராதம் அறவிடப்படும் முறையை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்கான அடிப்படைப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை நமது நாட்டில் மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கண்டறியும் செயற்பாடு மாத்திரமே நடைமுறைப்படுத்த ப்படுகின்றது.

தற்போது போதைப்பொருள் பாவனையுடன் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை இணங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மூன்றாவது குழந்தையை பிரசவித்த பெண்ணின் வயிற்றில் பழைய துணியை வைத்து தைத்ததால் கடும் பாதிப்பு

**மு.தமிழ்ச்செல்வன்**

முல்லைத்தீவு மாவட்டபொது வைத்தியசாலையில் கடந்த 21.05.2023 அன்று சத்திர சிகிச்சை மூலம் குழந்தையை பெற்றெடுத்த கருநாட்டுக்கேணியைச் சேர்ந்த 34 வயது பெண்ணின் வயிற்றில் துணியை வைத்து தைத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கருநாட்டுக்கேணி கிராமத்தைச் சேர்ந்த நாளாந்தம் கூலிக்கு கடற்றொழில்செ ய்து வருகின்ற குடும்பம் ஒன்றைச் சேர்ந்த 34 வயது பெண் தனது மூன்றாவது குழந்தை பிரசவத்திற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 21.05.2023 அன்று சத்திரசிகிச்சை மூலம் குழந்தை பிரசவிக்கப்பட்டது. இதன்

போது பாவிக்கப்பட்ட பருத்தித்துணித் துண்டுகளில் ஒன்றினை மீளவும்எ டுக்காது வயிற்றுக்குளேயே வைத்தியர்கள் வைத்துத் தைத்து அனுப்பிவிட்டார்கள்.

இதன்காரணமாக தீராத கடும் வயிற்று வலிக்குள்ளான பெண் கொக்குளாய் மற்றும்

முல்லைத்தீவு வைத்தியசாலைகளுக்குச் சுமார் பத்துத் தடவைகளுக்கும் மேல் சென்று வைத்தியர்களிடம் காட்டியுள்ளார். பிறந்த குழந்தையுடன் மூன்று பெண் குழந்தைகளை கொண்ட குடும்பத்தில் தினமும் கூலிக்கு கடற்றொழிலுக்குச் செல்லும் தாம் கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் வைத்தியசாலைக்கு அலைந்து திரிந்தாகவும் குறித்த பெண்ணின் கணவர் கவலையுடன் தெரிவித்தார். 'சத்திரசிகிச்சை செய்த இடத்தில் துணியின் துண்டு வெளியே தெரிகிறது. சீழ் பிடித்துள்ளது' எனக் கூறிய போதும் ஆரம்பத்தில் கண்டுகொள்ளாதவர்கள்

பின்னர் விபரீதத்தை உணர்ந்துகொண்டு 12.07.2023 அன்று முல்லைத்தீவு பொது

வைத்தியசாலையில் அனுமதித்து மீளவும் வயிற்றில் அதே இடத்தில் வெட்டப்பட்டு உள்ளே விடப்பட்டிருந்த துணி அகற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் இந்த விடயம் தொடர்பில் நாம் முல்லைத்தீவு பொது வைத்தியசாலை பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது 'அவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றதாக தனக்கு எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை' எனத் தெரிவித்தர்.

# கிளிநொச்சியில் மதுபான சாலைக்கு எதிர்ப்பு

கிளிநொச்சி - முழங்காவில் பகுதியில் உணவகத்துடன் கூடிய மதுபானசாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் புதன்கிழமை (26) ஈடுபட்டனர்.

கிளிநொச்சி - முழங்காவில் இரணைமாதா நகர்ப்பகுதியில் கடற்றொழில் குடும்பங்கள் செறிந்து வாழும் மையப்பகுதியில் உணவகத்துடன் கூடிய மதுபானசாலை ஒன்றை



அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதனை தமது பகுதியில் அமைக்க வேண்டாம் எனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் மதுபானசாலை அமையுமானால் தமது பிரதேசத்தில் பல்வேறு வகையான பாதிப்புகள் ஏற்படும் என்றும் இது தொடர்பில் பொது அமைப்புகள் மீனவ சங்கம் என இணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

மேலும், இது தொடர்பாக பிரதேச செயலாளர் பொலிஸார் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு மகஜர்களையும் வழங்கியுள்ளனர்.

## மீன்களின் விலை அதிகரித்துள்ளதாக சில்லறை வியாபாரிகள் தெரிவிப்பு

எப்.முபாரக்



திருகோணமலை மீன் பொதுச் சந்தையில் மீன்களின் விலை அதிகரித்துள்ளதாக சில்லறை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்

இதேநேரம் வெளி மாவட்டங்களில் இருந்து கடற்றொழில் நடவடிக்கைக்காக வருபவர்கள் டைனமைட், சுருக்குவலை போன்ற சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதினால் வலைகளில் மீன்கள் குறைவாகவே பிடிபடுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறான சூழலில் திருகோணமலை மீன் பொதுச் சந்தையில் திருக்கை மீன் ஒரு கிலோகிராம் 800 ரூபாய்க்கும், நெத்தலி 1500 ரூபாய்க்கும், கணவாய் 1100 ரூபாய்க்கும், இறால் 1200 ரூபாய்க்கும் விற்பனையாகி வருகின்றது.

அத்துடன் மொத்த வியாபாரிகள் அதிக விலைக்கு விற்பதனால் சில்லறை வியாபாரிகள் கிராமங்களுக்கு சென்று இன்னும் மேலதிக விலைக்கு விற்க வேண்டிஉள்ளதாகவும், சில்லறை வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## கறுப்பு ஜூலை நினைவேந்தலுக்கு அழைப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி), கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் நாளைய தினம் வியாழக்கிழமை (27), பி.ப.4.00 மணிக்கு, கிளிநொச்சி சேவை சந்தை முன்றலில் கறுப்பு ஜூலை தமிழின அழிப்பின் 40வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந் நினைவேந்தல் நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, கட்சியின் பொதுச்செயலாளர் மருத்துவர்.ப.சத்தியலிங்கம், தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் நல்லதம்பி சிறீகாந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன் மற்றும் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச்செயலாளர் திருமதி. அனந்தி சசிதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான பாக்கியசெல்வம் அரியநேந்திரன், கனகலிங்கம் சிவாஜிலிங்கம், ஈஸ்வரபாதம் சரவணபவன் உள்ளிட்ட அரசியற் பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளதோடு நினைவுரைகளையும் ஆற்ற உள்ளனர்.

மனிதப் பேரவலத்துக்கும், தமிழின அழிப்புக்கும் தோற்றுவாயான கறுப்பு ஜூலை படுகொடுலையில் உயிர்துறந்த உறவுகளை அஞ்சலிக்கும் இந் நினைவேந்தல் நிகழ்வில் அனைத்துப் பொதுமக்களையும் இணைந்துகொள்ளுமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

## மிஸஸ் எர்த் இன்டர்நேஷனல் நாடு திரும்பினார்

டி.கே.பி.கபில

மிஸஸ் எர்த் இன்டர்நேஷனல் - 2023 Mrs Earth International பட்டத்தை வென்ற அம்பாறையைச் சேர்ந்த 21 வயதான திருமதி சஷ்மி திஸாநாயக்க, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக புதன்கிழமை (26) நாடு திரும்பினார்.




45 நாடுகளைச் சேர்ந்த 60 போட்டியாளர்கள் பங்கேற்ற இந்தப் போட்டி ஜூலை 17 முதல் ஜூலை 22 வரை பிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெற்றது. அங்கு, திருமதி சஷ்மி திஸாநாயக்க இந்த போட்டியின் 04 துணைப் போட்டிகளை வென்றார், இதன் மூலம் உலக திருமணமான உலக அழகியாக வென்றார்.

## 60 வயதான பெண் துஷ்பிரயோகம்: பொலிஸ் சார்ஜண்ட் கைது

இரவு ரோந்து சென்றிருந்த பொலிஸ் சார்ஜன்ட், வீடொன்றுக்குள் நுழைந்து 60 வயதான பெண்ணொருவரை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரம்புக்கனை பரபே, உலகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்கு இரவு வேளையில் நுழைந்து அந்த வீட்டில் இருந்த 60 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்த பின்னர் வீட்டைச் சேர்ந்தவர்கள் பொலிஸ் சார்ஜன்டை பிடித்து கட்டிவைத்துள்ளனர். அதன் பின்னர், தாங்கள் மீட்டதாக ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் இருந்த 60 வயதுடைய பெண் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சந்தேகத்தின் பேரில் இந்த சார்ஜன்ட் கைது செய்யப்பட்டதாக அப்பகுதியின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரம்புக்கனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இந்த சார்ஜன்ட் தலைமையில் பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி ஆகியோர் கடந்த 24 ஆம் திகதி இரவு முதல் மறுநாள் காலை வரை பொலிஸ் கெப் வண்டியில் ரோந்தில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மற்ற இரண்டு அதிகாரிகளிடம் அன்று இரவு 11.30 மணியளவில் மீண்டும் பொலிஸ் நிலையத்திற்கு வருவதாகக் கூறிவிட்டு பொலிஸ் வண்டியை விட்டு பொலிஸ் சார்ஜன்ட் இறங்கிவிட்டார்.

இந்நிலையில், உலகம, பரப்பே பிரதேசத்தில் உள்ள பெண்ணின் வீட்டிற்குள் திருடன் நுழைந்துள்ளதாக பொலிஸ் 119 அவசர அழைப்புப் பிரிவினருக்கு தகவல் கிடைத்தது. அதன் பிரகாரம் பொலிஸ் கெப் வண்டியில் கடமையாற்றிய இரு உத்தியோகத்தர்களும் மேலும் இரு உத்தியோகத்தர்களும் அங்குச் சென்று வீட்டை சோதனையிட்டனர்.

அங்கு சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள், சீருடையில் இருந்த பொலிஸ் சார்ஜன்ட் வீட்டின் முன் கட்டப்பட்டிருந்ததைக் கண்டு அவரை மீட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

பொலிஸ் சார்ஜென்ட் வீட்டிற்குள் நுழைந்து தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக 60 வயதான பெண் முறைப்பாடு செய்ததாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பெண்ணின் முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் வீட்டுக்கு வந்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸ் சார்ஜன்ட் கேகாலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து ஒகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

## மக்கள் முரண்பாடுகளை தீர்க்க பிரிநிதிகள் தெரிந்து கொள்ள வேண்டும்

வா.கிருஸ்ணா

மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையிலான முரண்பாடுகளை தீர்ப்பதற்கான களம் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டமோ பிரதேச அபிவிருத்தி குழு கூட்டமோ அல்ல பிரச்சனைக்குரிய மக்கள் பிரதிநிதிகள் தெரிந்து கொள்ள வேண்டும் என கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும் ஈபி.ஆர்.எல்.எப் இன் சிரேஷ்ட தலைவருமான இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

“13வது திருத்தினை 35 வருடங்களில் பிற்பாடு அமல்படுத்த முயற்சிப்பது என்பதை நாங்கள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் அதனை அமுல்படுத்துவதற்கு தமிழ் தலைமைகள் ஒத்துழைக்க வேண்டும்”.

வியாழக்கிழமை (26) மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்

.இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

தமிழ் தலைமைகளும் இதனை நிராகரிக்கும் பட்சத்தில் தமிழர்களுக்கு ஒரு தீர்வும் எட்டப்படாத நிலை பல வருட காலத்திற்கு ஏற்படும் என்பதனை மறந்து விடக்கூடாது. இதில் ஏதாவது இலாப நட்டங்கள் ஏற்படும் பட்சத்தில் இதை மறுக்கின்ற தமிழ் தலைமைகள் இதற்கு பொறுப்புக் கூறியாகவேண்டும் பொறுப்பெடுத்தே ஆக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நேற்றைய தினம் இடம் பெற்று முடிந்திருக்கின்றது இந்த கூட்டம் தொடர்பாக மக்கள் மத்தியில் ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கின்றது.இந்த அதிருப்தியானது மக்கள் பிரதிநிதிகளால் ஏற்படுகின்றது என்பது மக்கள் மத்தியில் பரவலாக்கப்பட்டிருக்கின்றது. இதில் உண்மை தன்மையும் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அபிவிருத்தி குழு இணைத் தலைவர், துணைத்தலைவர், பதவி ரீதியாக ஆளுநர் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதையொட்டி 14 பிரதேச செயலகங்களுக்குமாக பிரதேச அபிவிருத்தி குழு தலைவர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் மத்திய அரசாங்கத்துடன் தொடர்புடையவர்கள் கிழக்கு மாகாண சபையுடன் தொடர்புடைய உயர் அதிகாரிகள் மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள் பிரதேச செயலகங்கள், திணைக்கள தலைவர்கள், அனைவரும் திட்டமிட்டவாரு பல மாதங்கள் ஆலோசனை செய்து அந்த கூட்டத்திற்கு வந்ததற்கான நோக்கம் மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்தி தொடர்பான விடயங்களை பேசி தீர்வு காண்பதற்கு.

திணைக்கள தலைவர்களை பொருத்தவரையில் நான் நினைக்கின்றேன் இவர்கள் மிகவும் பரிதாபகரமான நிலையில் உள்ளார்கள் என்று. இந்த அபிவிருத்தி குழு கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையிலான ஏற்பட்ட சண்டை காரணமாக ஆரோக்கியமான முறையில் இந்த அபிவிருத்தி குழு கூட்டம் இடம்பெற்றதா என்ற கேள்வி பொது மக்களுக்கு மத்தியில் தொக்கி நிற்கின்றது.மக்கள் பிரதிநிதிகளுக்கு இடையிலான முரண்பாடுகளை தீர்ப்பதற்கான களம் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டமோ பிரதேச அபிவிருத்தி குழு கூட்டமோ அல்ல பிரச்சனைக்குரிய மக்கள் பிரதிநிதிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 30 வருட கால யுத்தத்திற்கு பிற்பாடு அடிபட்டு இருந்த மக்கள் மற்றும் திணைக்கள தலைவர்கள் இந்தக் கூட்டத்தின் நிறைவில் காத்திரமாக அல்லது சந்தோஷமாக செல்கின்றார்களா என்றால் அது ஒரு கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்தி குழு கூட்டங்களில் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக முரண்பாடுகள் ஏற்படுகின்ற சில மக்கள் பிரதிநிதிகள் இந்த விடயத்துடன் அதாவது நேற்று இடம்பெற்ற கூட்டத்துடன் கடைசியும் முதலாக திருந்திக் கொள்ள வேண்டும். திருந்திக் கொள்ளாத பட்சத்தில் மக்கள் அவர்களுக்கு எதிராக வெகுஜன ரீதியாக போராடுவதற்கான சூழ்நிலை உருவாகும் என்கின்ற செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பாலத்தில் மோதி நின்ற லொறியால் பாதிப்பு




கௌசல்யா

டயகம – நுவரெலியா பிரதான வீதியில், லிந்துலை- என்போல்ட் பிரதேசத்திலுள்ள பாலமொன்றில் மோதுண்டு, லொறி ஒன்று விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இந்த விபத்து செவ்வாய்க்கிழமை 7.10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

லொறி பாலத்திற்கு குறுக்கே விபத்துக்கு உள்ளாகி உள்ளமையினால், அந்த வீதியூடான போக்குவரத்தும், நுவரெலியா – டயகம, தலவாக்கலை – எல்ஜின் ஆகிய நகரங்களுக்கு இடையிலான போக்குவரத்தும் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து தடையினால், தங்கக்கலை மற்றும் மெரயா ஆகிய பாடசாலைகளுக்கான ஆசிரியர் வருகை குறைந்துள்ளது. இதனால் பாடசாலை மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## பொலிஸாரை தாக்கிய தம்பதிகள் கைது

பிலியந்தலை பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அதிகாரிகள் இருவரை தாக்கியதாக கூறப்படும் குழுவை சேர்ந்த கணவன் மற்றும் மனைவி ஆகியோரைக் கைது செய்துள்ளதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த குழுவினர் பொலிஸாரை சுற்றிவளைத்து தாக்கும் போது பிரதான சந்தேக நபரின் மகன் ஒருவரின் கைத்தொலைபேசியில் வீடியோ எடுக்கப்பட்டமை பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான தம்பதியின் இரு மகன்கள் உட்பட மேலும் பலர் கைது செய்யப்படவுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை (25) இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் பிலியந்தலை பொலிஸ் போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த இரண்டு கான்ஸ்டபிள்கள் இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர்.

## மாணவர்களின் ஒழுக்க நடைமுறைகள் பற்றிய விசேட தீர்மானங்கள்

எஸ்.கார்த்திகேசு

அம்பாறை திருக்கோவில் வலயக்கல்வி அலுவகப் பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களின் ஒழுங்க வழிமுறைகள் மற்றும் சிகையலங்காரம் தொடர்பான விசேட உயர்மட்ட கூட்டம் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்று இருந்தன.

இவ் கலந்துரையாடல் கூட்டமானது திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா.கஜேந்திரன் தலைமையில் திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை(26) இடம்பெற்று இருந்தன.

இவ் கலந்துரையாடல் கூட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான சிகையலங்காரமானது பாடசாலை சட்ட திட்டங்களுக்கு அமைவான முறையில் ஒழுக்கமானதாக சகல



சிகை அலங்கார நிலையங்களிலும் மாணவர்களுக்கு நேர்த்தியான சிகை அலங்காரம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை சிகை அலங்கார நிலைய உரிமையாளர் சங்கத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதனை திருக்கோவில் வலயக் கல்வி பிரிவில் முழுமையாக அமுலாக்குவதென தீர்மானிக்கப்பட்டு, தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இருந்தன.

இதேவேளை வெள்ளிக்கிழமைகளில் ஆலய வழிபாடுகள் மற்றும் அறநெறி ஒழுக்க கல்வியை மாணவர்கள் கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு பின்னரும் ஞாயிற்றுக் கிழமைகளில் முழுநாளும் தரம் 09 வகுப்புக்கு கீழ்பட்ட மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்துவது தடை செய்யுமாறு இங்கு தீர்மானம் எட்டப்பட்டது இருந்தன.

இவ் கூட்டத்தில் மதகுருமார்கள் திருக்கோவில் வலயக் கல்வி அலுவலக கல்விப் பணிப்பாளர் ஆர்.உதயகுமார் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பி.மோகனகாந்தன் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பவாகரன் பொது சுகாதார பரிசோதகர்கள் அனைத்து பாடசாலைகளினதும் அதிபர்கள் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் பிரதேச சிகை அலங்கார நிலைய தொழிலாளர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# நீச்சல் தெரிந்தாலும் சேற்றில் விழுந்தால் தவழத்தான் வேண்டும்

ஆறு,குளம், நீரோடை, கடல் மற்றும் வாவிகளில் மூழ்கி உயிரிழப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. “எச்சரிக்கை” விளம்பர பலகை வைத்திருந்தாலும், தங்களுக்கு நீச்சல் தெரியும்தானே என்ற நினைப்பில் சென்று ஆபத்தில் சிக்கிக்கொள்வோர் இருக்கத்தான் செய்கின்றனர்.

தனியாகவும்,நண்பர்களுடனும், குடும்பத்தினரும் சென்று இவ்வாறு அனர்த்தத்துக்குள் சிக்கிக்கொள்கின்றனர். பல உயிர்களை காவுக்கொண்ட இடமென அறிந்த பின்னரும் அதில் இறங்கி முயற்சிகளை செய்வோரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் நாளாந்தம் நீரில் மூழ்கி மூன்று பேர் உயிரிழக்கின்றனர் என சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. தங்களுடைய பிரதேசங்களை விட்டு வெளிப்பிரதேசங்களுக்குச் சென்று நீர்நிலைகளில் குளிப்பவர்களே இவ்வாறான அனர்த்தங்களில் சிக்கிக்கொள்கின்றனர்.

தங்களுடைய பிரதேசங்களில் நீர்நிலைகளில் குளித்தவர்கள், கடலுக்கும் குளங்களுக்கும் சென்று நீராடும்போது நீரில் அள்ளுண்டு சென்றுவிடுவர். இறுதியில் சடலங்களாகவே மீட்கப்படுவர். தெய்வாதீனமாக ஒருசிலர் உயிருடன் திரும்பி இருக்கின்றனர்.

கரையோர பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு கடலலையின் வேகம் தெரியும். பொதுவாக அவர்கள், கடலில் நீராடுவதை தவிர்த்தே வந்திருக்கின்றனர். நீரேந்தும் பிரதேசங்களில் வசிப்போர், வானிலையை அவதானத்தில் எடுத்து ஆறுகளுக்குச் செல்வதில்லை.

குளங்களை அண்டிய பகுதிகளில் வசிப்போரை, கரையோரத்தில் குளித்துவிட்டு திரும்பிவிடுவர். எனினும், தங்களுடைய சொந்த பிரதேசங்களில் இருந்து வெளிப்பிரதேசங்களுக்கு வேலைக்குச் செல்வோரும், சுற்றுலாச் செல்வோருமே இவ்வாறான ஆபத்துக்களில் சிக்கிக்கொள்கின்றனர்.

கடலுக்குள் விழுந்து இறக்கும் கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துகொண்டே செல்கின்றன. நாட்டில் உள்ள 90 சதவீதமான கடற்றொழிலாளர்களுக்கு நீச்சல் திறன் இல்லை என இலங்கை உயிர்காப்புச் சங்கத்தின் நிறைவேற்று அதிகாரி அசங்க நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான கடற்றொழிலாளர்கள் தங்களுக்கு நீந்த முடியும் என்ற நம்பிக்கையை கொண்டிருக்கின்றனர். நீச்சல் திறன் மட்டுமே கடலில் உயிரைக் காப்பாற்ற போதுமானதாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. மீனவர்களுக்கு உயிர்க்காக்கும் அங்கிகள் வழங்கப்பட்டாலும் அவர்களில் பெரும்பாலானோர் அதைப் பயன்படுத்துவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அளவு கோல்களின் படி, உயிரைக் காப்பாற்றுபவர், ஒருவரைக் காப்பாற்ற ஆறு நிமிடங்களில் 200 மீட்டர் நீந்தக்கூடிய திறன் பெற்றிருக்க வேண்டும். ஒரு நீச்சல் வீரர் அமைதியான நீரில் 10 நிமிடங்களில் குறைந்தது 200 மீற்றர் நீந்தக்கூடிய திறன் பெற்றிருக்க வேண்டும்.

கடல் நீர் போன்ற வேகமான நீரில் ஒரு நீச்சல் வீரர் 400 மீட்டரை ஒன்பது நிமிடங்களில் நீந்தவேண்டும். எனினும் உயிர்காப்பவர் நீந்த குறைந்த பட்சம் ஆறு நிமிடங்களை மாத்திரமே எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது உடற்பயிற்சி தரநிலையாகும்.

நீச்சல் தெரிந்தவர் சேற்றில் விழுந்தால் தவழ்ந்துதான் வரனும் என்பதால், நீர்நிலைகளுக்குச் சென்று நீராடும்போது, கவனமாக இருக்கவேண்டும். அத்துடன் உயிர்காப்பு அங்கிகளை பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ரணில் ஏந்திவரும் ‘13வது திருத்தம்’ எனும் மாய மான்!



புருஜோத்தமன் தங்கமயில்

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய வேகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நேற்று புதன்கிழமை நடத்தியிருக்கிறார். அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் எண்ணத்தோடு இருக்கும் அவர், இனி வரும் நாட்களை தேர்தல் வெற்றிக்கான திட்டங்களை வகுக்கவும் செயற்படுத்தவும் செலவளிப்பார். புதிய தேர்தல் கூட்டணி ஒன்றுக்காக புதிய நண்பர்கள் பலரை தேட வேண்டியிருக்கிறது. கடந்த காலங்களில் நட்போடு இருந்த பலரும் இப்போது அவரின் அரசியல் எதிரிகள் ஆகிவிட்ட நிலையில், புதிய நண்பர்களை தேடிக் கொள்வது என்பது அவருக்கு தவிர்க்க முடியாதது. அதற்காக அவர், அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தை கையில் எடுத்திருக்கிறார் என்பதுதான் அவரின் அரசியல் சாணக்கியத்தனத்தைக் காட்டுகின்றது.

ராஜபக்‌ஷக்கள் ஆட்சியில் இருந்து விரட்டப்பட்டதும், அதனால் ஜனாதிபதியானவர் ரணில். அவரை, மக்களினால் தேர்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாகவோ, ஆட்சியாளராகவோ எந்தவொரு தரப்பும் கருதவில்லை. அதனால்தான், ரணிலோடு மிக இணக்கமாக இருக்கும் இந்தியா கூட, அவர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று ஒரு வருடத்துக்குப் பின்னர்தான் புது டில்லிக்கு அழைத்தது. தன்னை யார் என்ன கூறினாலும் பரவாயில்லை. இந்தியாவும் மேற்கு நாடுகளும் இலங்கையின் ஜனாதிபதியாக அங்கீகரிக்க வேண்டும் என்பது ரணிலின் பெரும் அவா. ஆனால், அவரது ஆசை அவ்வளவு சீக்கிரத்தில் நிறைவேறிவிடவில்லை. அதனை நிறைவேற்றுவதற்கு அவர் பல இராஜதந்திர விடயங்களை நிகழ்த்த வேண்டி வந்திருக்கின்றது. குறிப்பாக, இந்தியாவை மகிழ்விப்பதற்காக இலங்கை □ இந்திய ஒப்பந்தத்துக்கு தான் எப்போதும் விசுவாசமாக இருப்பதாக காட்டிக் கொள்ள வேண்டியிருக்கின்றது. அதனால்தான், அவர் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையை தீர்ப்பதற்கு 13வது திருத்ததை தீர்வாக முன்வைக்கிறார். அதுவும், பொலிஸ் அதிகாரமற்ற 13வது திருத்தத்தை தீர்வாக முன்வைக்கிறார்.

13வது திருத்தம் என்பது இலங்கையின் எந்தத் தரப்பினாலும் மனதார ஏற்றுக்கொள்ளப்பட்டதல்ல. அதனை, தங்களின் பிரச்சினைக்கான தீர்வுத் பொதியாக தமிழ் மக்கள் ஒருபோதும் கருதியதுமில்லை. தெற்கைப் பொறுத்தளவில், 13வது திருத்தம் என்பது நாட்டை பிளக்கும் இந்தியாவின் ஏற்பாடு என்பது தொடரும் எண்ணப்பாடு. அந்த எண்ணப்பாட்டினை பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளும், இனவாத அரசியல்வாதிகளும் ஏற்படுத்துவதில் கவனமாக இருக்கிறார்கள். 13வது திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்படும் போதே அதனிடத்தில் சமஷ்டிக் ஆட்சிக்குரிய எந்தக் குணாதிசயமும் காணப்படவில்லை. பின்னராக, 13வது திருத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தினால் மீளப்பெறப்பட்டபோது, மாகாணங்களின் அதிகார அலகு என்பது, மாவட்ட செயலகங்களையும் விட குறைவானது என்றானது. அதிக நேரங்களில் ஒரு மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) கொண்டிருக்கும் அதிகாரங்களைக் கூட மாகாண முதலமைச்சர் கொண்டிருப்பதில்லை. தன்னுடைய அதிகார விடயங்களுக்காகவே, மாவட்டச் செயலாளரை அணுக வேண்டிய, அனுமதிபெற வேண்டிய நிலை உண்டு. இதுதான், 13வது திருத்தத்தின் பிரகாரம் உருவான மாகாணங்களில் அதிகார வரம்பு. மாறாக, இந்திய மாநிலங்கள் கொண்டிருக்கின்ற எந்த அதிகாரத்தையும் இலங்கையின் மாகாணங்கள் கொண்டிருப்பதில்லை. ஏன், இந்தியாவின் புதுச்சேரி, சண்டிகர் போன்ற ஒன்றியப் பகுதிகள் (யூனியன் பிரதேசங்கள்) கொண்டிருக்கும் அரை மாநில அதிகாரத்தைக் கூட இலங்கையின் மாகாணங்கள் கொண்டிருப்பதில்லை.

13வது திருத்தத்துக்கு விசுவாசமாக இருக்கிறேன், என்பதன் மூலம் இந்தியாவை குளிர்த்துவிடலாம் என்பது ரணிலின் முதல் விடயம். அடுத்தது, 13வது திருத்தத்தை கையில் எடுத்தால் அதனை தமிழ்த் தரப்புக்கள் குறிப்பாக கட்சிகள் பெரிதாக எதிர்க்காது என்பது அவரின் நிலைப்பாடு. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வை முன்வைத்த தலைவர் என்ற பெயரை தான் எடுத்துக் கொள்வதோடு, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சிந்தாமல் சிதறாமல் தமிழ் மக்களின் வாக்குகளை முழுமையாக அள்ளிவிடாலாம் என்பது அவரின் எதிர்பார்ப்பு. அதற்காக அவர், தமிழ்க் கட்சிகளிடம் 13வது திருத்தத்தை பொலிஸ் அதிகாரம் தவிர்த்து நிறைவேற்றுவதாக புதிய ஆட்டத்தை தொடங்கியிருக்கிறார். அவரின் ஆட்டத்துக்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் இருக்கும் புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எப், ஜனநாயகப் போராளிகள் என்பன இசைந்துவிட்டன. அதிலும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சி.வி.விக்னேஸ்வரன் ரணிலின் தூதுவன் போலவே செயற்படத் தொடங்கியிருக்கிறார். 13வது திருத்தத்தை தமிழ் மக்களின் தீர்வாக கொண்டுவரும் நோக்கத்தை விக்னேஸ்வரனிடமும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினரிடமும் யார் விதைந்துரைத்தார்கள் என்பது தெரியவில்லை. ஏனெனில், தமிழ்த் தேசியத்தின் பெயரினால் தமிழ் மக்கள் 13வது திருத்தத்தை தமக்கான தீர்வாக கோரும் அங்கீகாரத்தை ஒருபோதும் ஒருவருக்கும் வழங்கவில்லை. அப்படிப்பட்ட நிலையில், சமஷ்டித் தீர்வுக்காக மக்களின் ஆணையைக் கோரிய இந்தக் கட்சிகள், இப்போது யாரின் மனதைக் குளிர்விப்பதற்காக 13வது திருத்தத்துக்குள் சுருங்க நினைக்கின்றன என்கிற கேள்வி முக்கியமானது.

பொலிஸ் அதிகாரம் அற்ற 13வது திருத்த நிறைவேற்றம் என்ற பந்தை ரணில் தமிழ்த் தரப்பிடம் தூக்கிப் போட்டுவிட்டு, அதற்காக களமாடுவதற்கு சி.வி.விக்னேஸ்வரனையும், இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தின் செயலாளராக இருந்த க.விக்னேஸ்வரனையும் இறக்கியிருக்கிறார் என்பது கவனத்தில் கொள்ளக் கூடியது. இந்தியாவிலிருந்து வந்த அடுத்த நாட்களிலேயே, இரு விக்னேஸ்வரன்களையும் அழைத்து, 13வது திருத்த நிறைவேற்றம் பற்றி ரணில் பேசியிருக்கிறார். அந்தச் சந்திப்பில் ஆயுதமற்ற பொலிஸ் அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று தாம் கோரியிருப்பதாக சி.வி.விக்னேஸ்வரன் ஊடகங்களிடம் கூறியிருக்கிறார். அதாவது, புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்துக்கான பொலிஸார் கொண்டிருக்கின்ற தடிகளைக் கொண்டிருக்கிற அதிகாரம். அது உண்மையில் அதிகாரக் கட்டமைப்புக்குள் எந்த வகையிலும் வராது. ஏனெனில், வீதி ஒழுங்கை பேணும் வேலைக்கு ஒப்பான ஒன்று. குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸ் அதிகாரம் என்பது முழுமையாக நடைமுறைக்கு வர வேண்டும். இல்லையென்றால், புதுச்சேரி போன்ற ஒன்றியப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள மத்திய பாதுகாப்பு படையினருக்கு காணப்படும் அதிகாரம் போன்ற விடயத்தை, வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் எடுத்துக் கொள்ளுவார்கள். அது, சிவில் நிர்வாக நடவடிக்கைகளுக்கு எந்த வகையிலும் பங்களிக்காது. மாறாக, இராணுவப் பிரசன்னம் என்பது, எந்த இடத்திலும் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும். அதனை முன்னாள் நீதியரசரான விக்னேஸ்வரனால் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை என்று தெரியவில்லை. மாறாக, அவர், இந்தியாவின் ஆணைக்கு அமைய தென் இலங்கையின் விசுவாசியாக செயற்படுகிறார் என்பதாக உணர வேண்டி ஏற்படுகின்றது.

13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் எண்ணம் தனக்கு உண்டு என்று கூறும் ரணில், அதனை நடைமுறைப்படுத்த வேண்டியது பாராளுமன்றம் என்கிறார். அவர் வாய்ப்பேச்சில் எதை வேண்டுமானாலும் கூறிவிடலாம். ஆனால், அதனை நிறைவேற்ற பாராளுமன்ற பெரும்பான்மை அவசியம். அந்தப் பெரும்பான்மை என்பது இன்னமும் ராஜபக்‌ஷக்களிடமே இருக்கின்றது. ஏற்கனவே, ராஜபக்‌ஷ அணியிலுள்ள பல தரப்புக்களும் ரணில் மீது அதிருப்தியில் இருக்கும் நிலையில், தற்போதுள்ள பாராளுமன்றத்தில் 13வது திருத்தம் பற்றிய எந்த விவாதமோ, விடயமோ வந்தாலும் அது தோற்கடிக்கப்படும். அப்படிப்பட்ட நிலையில், நடைமுறைக்கு வரமுடியாத ஒன்றை, ரணில் தீர்வுப்பொதி போல தள்ளுவதும், அதனை, விக்னேஸ்வரனும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினரும் முதுகில் சுமப்பதும் அபத்தமானது. 13வது திருத்தம் முழுமையாக அமுல்படுத்துவதை தாம் ஏற்கோம் என்று ரணிலின் அமைச்சரவைச் சகாக்களே, தமிழ்க் கட்சிகளுடனான பேச்சு மேடையில் வெளிப்படையாக கூறுகிறார்கள். அதற்கு, ரணிலும் நீங்கள் அதை பாராளுமன்றத்தில் பார்த்துக் கொள்ளுங்கள் என்கிறார். அப்படிப்பட்ட நிலையில், ரணில் 13வது திருத்தத்தை கையில் எடுத்துக் கொண்டு இப்போது ஆடுவது தேர்தலுக்கு ஆட்களைப் பிடிக்கும் ஆட்டம் மட்டுமே.

ஏனெனில், 13வது திருத்தத்தில் இருந்து பொலிஸ் அதிகாரத்தை நீக்கம் செய்யும் நோக்கில் 22வது திருத்தச் சட்டத்தை கொண்டு வரப்போவதாக உதக கம்மன்பில அறிவித்திருக்கிறார். அப்படியொரு திருத்தம் பாராளுமன்றத்துக்கு வந்தால், அது இலகுவாக நிறைவேறிவிடும். ஏனெனில், அதற்கான பாராளுமன்றப் பெரும்பான்மையை இன்றைய ஆளும் தரப்பு கொண்டிருக்கின்றது.



## வாழ்வியல் தரிசனம்

எல்லாத் தேவைகளும் ஆடம்பரம் நிறைந்ததாக இருந்தாலும் கூட, கடவுளிடம் ஏகப்பட்ட கோரிக்கைகளை ஒன்றன்பின்னர் ஒன்றாக மனிதர்கள் வைக்கின்றார்கள்.

கடவுளிடம் இலஞ்சம் தருவதாகப் பேரம் பேசுவதுபோல், ‘இந்த வேலையை முடித்துத் தந்தாய் என்றால், பல இலட்சம் செலவில் தர்மகாரியங்கள், பூஜைகள் செய்வேன்’ எனப் பெரிய வேண்டுதல்களைச் செய்வார்கள்.

சகல உயிர்களையும் காக்கும் தெய்வத்தை, வியாபாரம் செய்வதுபோல் அறியாமையில் பேசும் நபர்கள் சுயநலமுடைய அறிவிலிகள்.

நேர்மையுடன், பக்தியுடன் வேண்டுவதற்கும் ஆணவத்துடன் ‘இதைத் தா, நான் செய்வேன்’ என வேண்டுவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இரண்டாது வெட்கப்பட வேண்டிய முறையாகும். கடவுளிடம் பக்தியுடன் எதைக் கேட்டாலும் கேட்காது விட்டாலும், கடவுள் கிருபை செய்தபடியேதான் இருக்கின்றார் என்பதில் ஏது ஐயம்?

எதையும் செய்யாமல் சோம்பித் திரிபவர்கள், குடும்பத்தினரைக் கண்டுகொள்ளாமல் மனம்போன போக்கில் சுற்றித் திரிந்து, அறவழி நடக்காதவர்களை எவர்தான் விரும்புவார்?

எதையாவது பெறத்தான் விரும்பும் சிலர், கொஞ்சமாவது மக்களை நேசிக்கும் பண்பை ஏன் கண்டுகொள்வதில்லை? மனிதன் தனித்தவன் இல்லை; சகலருடனும் இணைந்து செயலாற்ற வேண்டியவன்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

## கட்டாக்காலி மாடுகளால் தொல்லை




கல்முனை மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் போக்குவரத்துக்கு இடையூறாக கட்டாக்காலி மாடுகள் இரவு வேளைகளில் அதிகளவாக நடமாடி வருகின்றன. இக்கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லை அதிகரித்திருப்பதால் அவற்றைக் கைப்பற்றி உரிமையாளர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட நகர வீதி ,பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை ,சேனைக்குடியிருப்பு, சாய்ந்தமருது,மருதமுனை,பெரிய நீலாவணை, உள்ளிட்ட வீதிகளில் சுற்றித்திரியும் கட்டாக்காலி மாடுகளால் அடிக்கடி விபத்துக்கள் மற்றும் பொது மக்களின் நாளாந்த செயற்பாடுகளுக்கு சிரமம் ஏற்படுகின்றன.

எனினும், இது தொடர்பாக பொதுமக்களினால் பல்வேறு முறைப்பாடுகள் சமூக ஊடகங்களில் விமர்சனங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.இவ்வாறு கட்டாக்காலி மாடுகளை பிடிப்பதற்கு கல்முனை மாநகர சபை பொலிஸாருடன் இணைந்து எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

பாறுக் ஷிஹான்







# 72 வது குருபூஜை

காரைதீவில் ஜீவ சமாதி நிலையில் அமர்ந்திருந்து குருவருள் பாலிக்கின்ற ஜீவ சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமிகளின் குருபூசையும் அன்னதானமும் நேற்று புதன்கிழமை (26) சிறப்பாக நடைபெற்றது.

வி.ரி.சகாதேவராஜா

# பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கிவைப்பு





காத்தான்குடி பிரதேச செயலகத்தினால் ஒரு பயனாளிக்கு 3 ஆடுகள் வீதம் இரண்டு பயணாளிகளுக்கு ஆறு ஆடுகள் (25) செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

பின்தங்கிய கிராமிய பிரதேச வீட்டு கால் நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச் செய்கை இராஜாங்க அமைச்சின் ஆடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் இந்த ஆடுகள் வழங்கப்பட்டன.

இந்த ஆடுகளை வழங்கி வைக்கும் வைபவத்தில் காத்தான்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் அம்பாரை மாட்ட பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.டி.எம்.மாஹீர் காத்தான்குடி கால் நடை வைத்திய அலுவலகத்தின் உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

# கட்டடத் தொகுதி திறந்து வைப்பு







மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்கான புதிய நிருவாகக் கட்டடத் தொகுதி செவ்வாய்க்கிழமை (25) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இடவசதிகளின்றி ஓட்டமாவடி நகரில் இயங்கி வந்த பழைய கட்டடத்தில் இருந்த பிரதேச செயலக அலுவலகம் இடம்மாற்றப்பட்டு காகிநகரில் உள்ள விசாலமான இடத்தில் சுமார் 6 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

புதிய அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவில் சுற்றாடல்துறை அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவருமான நஸீர் அஹமட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ் அமீர அலி உட்பட பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள், அலுவலர்கள். பிரமுகர்கள் பொது மக்கள் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

# நூல்கள் வெளியீடு



மாத்தளை ஹரஸ்கம விஜயபால மகாவித்தியாலயத்தில் மாணவ மாணவி தலைவர்களுக்கு சின்னம் சூடும் நிகழ்வின்போது தரம் 7ல் கற்கும் என்.ஜீ.செனுர லக்சான் நவரத்ன என்ற மாணவன் எழுதிய “வெலமெதகெதர லமா லோகய”( வயல் வெளியில் சிறுவர் உலகம்) எனும் இரு நூல்களின் வெளியீட்டுவைபவம் இக்கல்லூரியில் இடம்பெற்றது.

இதன்போது மாத்தளை வலய கல்வி பணிப்பாளர் விஜயந்தி ஜயசூரியவுக்கு தனது நூல்களை மாணவர் கையளிப்பதையும் அருகில் மாணவரது தாயார் சுனேத்ராவும் கலந்து கொண்டிருப்பதையும் காணலாம்.

ஜலீல்

# அலுவலகம் திறந்து வைப்பு







வவுனியா நகரசபை நூலக கட்டடத்தில் வடமாகாண ஆளுனரின் மக்கள் ஒழுங்கமைப்பு தொடர்பாடல் அலுவலகம் வடமாகாண ஆளுனர் பி. எஸ். எம். சாள்சினால், புதன்கிழமை (26) திறந்து வைக்கப்பட்டது

வவுனியா , மன்னார் , முல்லைத்தீவு ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள் ஆளுநரை தொடர்பு கொள்வதற்கு நீண்ட தூரம் பயணித்து யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் மக்களின் நலனை கருத்தில் கொண்டு குறித்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

வாரநாட்களில் மக்கள் தமது முறைப்பாடுகளை இவ் அலுவலகத்தில் தெரிவிக்க முடியும், என்பதுடன் மாதத்தில் இரு தடவைகள் ஆளுனர் இங்கு விஜயம் மேற்கொண்டு மக்களை சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

க. அகரன்

# விஜிபி ஆண்டு விழாவில் சான்றோர்களுக்கு கௌரவம்







விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 30 ஆவது ஆண்டு விழா சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள டாக்டர் எம்ஜிஆர் ஜானகி மகளிர் கலை கல்லூரியில் நடைபெற்றது.

இதில், சிறப்பு விருந்தினர்களாக தமிழக சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு, சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், விஐடி பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன், நீதியரசர் டி.என்.வள்ளிநாயகம், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவ்வை ந.அருள், வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையின் தலைவர் நாஞ்சில் பீட்டர், மதிமுக துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அப்போது விஜிபி தமிழ்ச் சங்கத் நிறுவனத் தலைவர் வி.ஜி.சந்தோஷம் அவர்களின் தமிழ்ப் பணியைப் பாராட்டி நினைவுப் பரிசுகளும் செங்கோலும் வழங்கப்பட்டன.

விழாவில் இலக்கியப் பணியாற்றியதற்காக பல்வேறு கலைஞர்களுக்கு இலக்கிய நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. அதில் சிறப்பான கல்விப் பணி ஆற்றி வரும் டாக்டர் எம். ஜி.ஆர். ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தலைவர் வழக்கறிஞர், முனைவர் குமார் ராஜேந்திரனுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதேபோல், வாழ்நாள் சாதனையாளருக்கான விருது சமூக செயற்பாட்டாளர் ‘பாலம்’ கல்யாண சுந்தரம் அவர்களுக்கும், கலைத்துறையில் சேவையாற்றியதற்காக நாட்டுப்புறப் பாடகர் வேல்முருகன் உள்ளிட்டோருக்கும் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

# இரண்டாவது பட்டமளிப்பு விழா







சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழா சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் வெகு விமர்சையாக புதன்கிழமை (26) நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் மௌலவி எஸ்.எச். ஆதம்பாவா மதனி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டை சேர்ந்த கொடைவள்ளல் ஐயூப் அஸ்ஸர் ஊனி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன் மற்றும் சில அரேபிய பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

இவர்கள் பொல்லடி, கஸீதா, பைத் உள்ளிட்ட முஸ்லிம் கலாசார பாரம்பரியங்களுடன் கல்லூரி நிர்வாகத்தினரால் வரவேற்கப்பட்டனர்.

காத்தான்குடி ஜாமியா சித்தீக்கியா அரபுக் கல்லூரி முதல்வர் அஷ்ஷெய்க் எம்.ஐ.அப்துல் கபூர் மதனி அவர்கள் பட்டமளிப்பு பிரசங்கத்தை நிகழ்த்தினார்.

இதன்போது 31 மாணவிகள், மௌலவியா பட்டத்தை பெற்றுக் கொண்டனர். அதிதிகளினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஏ.எஸ்.மௌலானா




# ‘அருவி’



சயனிகா ஸ்ரீகாந்த்
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைகழகம்

> நிச்சயமாக எக்காலத்திலும் சிறந்த தமிழ் திரைப்படங்களில் ஒன்றாக ‘அருவி’ இருக்கும். உண்மையான அருவியில் நனைவது போல் சிலிர்ப்பான அனுபவத்தை தரும் இதுபோன்ற ஒரு படம் மீண்டும் ஒருமுறை அமையுமா என்பது ஐயமே

*Dream* வாரியர்ஸ் பிக்சர்ஸில் எஸ்.ஆர். பிரகாஷ் மற்றும் எஸ். ஆர். பிரபு தயாரிப்பில் அருண் பிரபு புருஷோத்மன் இயக்கத்தில் முற்றிலும் புது முகங்கள் நடிக்க உருவான படம் தான் ‘அருவி’.

இந்த படத்துக்கு பிந்து மாலினி, வேதாந்த பரத்வாஜ் ஆகியோர் இசையமைத்திருக்கின்றனர்.

‘அருவி’யை ஒரு பெண்ணியம் சார்ந்த படமாகவும் கொள்ளலாம். 2017இல் வெளியான ‘அறம்’ திரைப்படத்துக்கு அடுத்ததாக அதிகம் பேசப்பட்ட முழுக்க முழுக்க ஒரே ஒரு பெண் கதாபாத்திரத்தை மையமாக வைத்து வெளியான படம் தான் ‘அருவி’.

இந்தப் படம் சமூகத்தில் நடக்கும் ஒரு சில விடயங்களையும், கிண்டல் செய்கின்ற தட்டிக் கேட்கும் வகையில் அமைந்த படமாகும்.

அடுத்து என்ன நடக்கும் என்ற த்ரில் அதிகமாக காணப்படும் இந்த படத்துக்கு படத்தொகுப்பு, வசனம், நாயகி அதிதி பாலன், படத்தில் இளையோடி இருக்கும் பொசிட்டிவிட்டி ஆகியவை சிறப்பு சேர்க்கிறது.

இப்படமானது ‘அருவி’ எனும் பிரதான பெண் கதாபாத்திரத்தை மையமாகக் கொண்டு அந்தப் பெண்ணின் சிறுபிராயத்திலிருந்து அவள் வளரும் வரை அவளுக்கு ஏற்படும் ஒவ்வொரு விடயத்தையும் பிரதிபலிப்பதாக காணப்படும்.

அந்த வகையில் பாசமான குடும்பத்தோடு இருந்த ‘அருவி’, திடீரென அவளது தாய், தந்தை வெறுத்து ஒதுக்க, ஒரு நாடோடியாக அவளது வாழ்க்கைப்பயணம் தொடர்கிறது. இதற்கிடையில் அவளுக்கு திருநங்கையாக எமிலி எனும் ஒரு நண்பி கிடைக்கிறாள். இவர்கள் இருவரும் ரியாலிட்டி ஷோவில் கலந்துகொள்கிறார்கள்.

அந்த வகையில் உண்மையில் அருவி யார்? எது அவளை வீட்டை விட்டு வெளியேற்றி டிவி நிகழ்ச்சியில் பங்குகொள்ளச் செய்தது? டிவி நிகழ்ச்சி சூட்டிங் செட்டில் என்ன நடந்தது? தவறு யார் மீது என்பதையெல்லாம் அடுத்தடுத்த திருப்பங்களின் வழியே சொல்கிறது, இந்த திரைக்கதை.

ஒரு கட்டத்தில் தீவிரவாதியாக கருதப்படும் ‘அருவி’ இந்த சமூகத்துக்கும் அரசாங்கத்துக்கும் தான் தீவிரவாதி அல்ல, அன்புக்காகவும் நல்ல அடைக்கலத்துக்காகவும் ஏங்கும் தீவிர நோயாளி என்பதை அந்த அவலப்பெண் எப்படி புரிய வைக்கிறாள் என்பதுதான் அருவி படத்தின் கதையும் களமும்.

சுருக்கமாக இப்படத்தின் கதைக்கருவை பார்த்தோமானால், சமூகத்தினாலேயும் அதன் அலட்சியத்தினாலேயும் எதிர்பாராமல் எய்ட்ஸ் நோய்க்கு ஆளாகும் இளம் பெண்ணின் சமூக நிலையும் மனநிலையுமே இதன் கரு.

இந்தப் படத்தில் திருநங்கை கதாபாத்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பது, பாதிக்கப்பட்டவள் பெண்ணாகவே இருந்தாலும் அவள் அவ்வாறு இருக்கப் போய்தான் அவ்வாறு நடந்தது என திரும்பவும் பெண்ணையே குற்றம் சாட்டுவது என புரையோடிப் போயிருக்கும் பிற்போக்கு எண்ணங்களை சுளிர் வசனங்கள் மூலம் விமர்சனத்துக்கு உள்ளாக்கியிருக்கும் இயக்குநர் பிரபுவின் திறமை, அதுவும் இடைவேளைக்கு முன் அருவி மூச்சுவிடாமல் பேசும் வசனம் என்பவையே இந்த படத்தின் வெற்றிக்கு காரணங்கள் என கருதலாம்.

அந்த வகையில், அந்த வசனங்கள் இயக்குநர் அருண் புருஷோத்தமனின் வரிகளாக இருந்தாலும், அதற்கு உயிர் கொடுத்தது நாயகி அதிதி பாலன் ஆவார்.

இந்தப் படத்தில் நாயகி அதிதி பாலனின் நடிப்பு மிகவும் சிறப்பாகவும் யதார்த்தமாகவும் காணப்படுகிறது.

அந்த வகையில் இந்த படமானது திருநங்கைகளையும் பாலியல் நோயாளிகளையும் இழிவாக பார்க்கும் சிலரது எண்ணங்களை கொஞ்சமேனும் மாற்றும் அளவுக்கு உள்ளது.

நிச்சயமாக எக்காலத்திலும் சிறந்த தமிழ் திரைப்படங்களில் ஒன்றாக ‘அருவி’ இருக்கும். உண்மையான அருவியில் நனைவது போல் சிலிர்ப்பான அனுபவத்தை தரும் இதுபோன்ற ஒரு படம் மீண்டும் ஒருமுறை அமையுமா என்பது ஐயமே.



# கர்ப்பமாக்கினால் 25 இலட்சம் சம்பளம்

## மோசடி செய்தவருக்கு வலை

புதுச்சேரியை சேர்ந்த 44 வயதுடைய ஸ்ரீஜித் என்பவர் சொந்தமாக ஒரு கெஸ்ட் ஹவுஸ் நடத்தி வந்துள்ளார். இங்கு நேபாளத்தை சேர்ந்த ஷாஜன் பட்டாராய் என்னும் 34 வயதுடைய நபர் கெஸ்ட் ஹவுஸில் தங்கி வேலை செய்து வந்துள்ளார்.

இவருக்கு கடந்த மாதம் மர்ம நபர் ஒருவர் செல்போனில் அழைப்பு விடுத்துள்ளார். தன்னிடம் ஒரு ஆஃபர் இருப்பதாகவும் அதன் மூலம் அதிக பணம் சம்பாதிக்கலாம் என்றும் ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விரிவாக கூறுகையில் அந்த நபர் ஒரு குழந்தை பேரு வைத்தியசாலை நடத்தி வருவதாகவும், அங்கே குழந்தைக்காக வரும் பெண்களுடன் பாலியல் உறவு வைத்துக் கொண்டு அதன் மூலம் அவர்கள் கர்ப்பமானால் 25 இலட்சம் வரை சம்பாதிக்கலாம் என்று தெரிவித்துள்ளார். மேலும் இதற்கு முற்பணமாக 2 .லட்சம் தரப்படும் என்றும் கூறியுள்ளார்.

அதற்கேற்ப ஷாஜன் பட்டாராய் அவரது ஆதார் கார்டு, அடையாள அட்டை, வங்கி கணக்கு போன்றவற்றை அனுப்பி வைத்துள்ளார். பின்னர் அவரது செல்போனுக்கு குறுஞ்செய்தி ஒன்று அந்த மர்ம நபர் அனுப்பி வைத்துள்ளார்.

அதில் பெண்ணுடன் உறவு கொள்ள முற்கொடுப்பனவா 5 இலட்சம் 49 ஆயிரம் ரூபாய் ஷாஜன் பட்டாராய் வங்கி கணக்கில் செலுத்தியது போல் ஆவணங்கள் அதில் அனுப்பப்பட்டிருந்தன.


பின்னர் மீண்டும் தொடர் கொண்டு பேசிய அந்த மர்ம நபர் இந்த ஐந்து இலட்சம் மற்றும் 49 ஆயிரம் ரூபாயை முழுவதும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

அதற்கு முன்பு விண்ணப்ப படிவம் ஒன்று பூர்த்தி செய்ய வேண்டும் மற்றும் பதிவு கட்டணம் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். இதனை தொடர்ந்து ஷாஜன் பட்டாராய் வங்கி கணக்கில் பணம் செலுத்தப்பட்டதா? என்பதை ஆய்வு செய்யாமல் அந்த மர்ம நபர் அனுப்பிய கியூ ஆர் கோர்டை ஸ்கேன் செய்து ரூபாய் 50 ஆயிரம் ரூபாய் பதிவு கட்டணமாக செலுத்தியுள்ளார்.

அதன்பின் அந்த நபரை தொடர்பு கொள்ளவே முடியவில்லை. நம்பரை பிளாக் செய்துவிட்டார். அதன் பின் அவரது வங்கி கணக்கில் பணம் செலுத்தப்பட்டதா என்பதை ஆய்வு செய்தவருக்கு அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது.

ஒரு ரூபாய் கூட அவரது வங்கி கணக்கில் செலுத்தப்படவில்லை என்பதை அறிந்த ஷாஜன் பட்டாராய் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

பின்னர், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தவர் காவல்துறையில் புகார் அளித்துள்ளார். பின்னர் மோசடி பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்த பொலிஸா அந்த மர்ம நபரை தேடி வருகிறார்கள்.



# தட்டிக்கேட்ட சாரதி மீது தப்பான புகார்

**காரில் இருந்தவாறே புகைப்பிடித்தமையால் சாரதி உடனே காரை நிறுத்தி அவர்களை கண்டித்துள்ளார்**

பெங்களூரு மடிவாளா பகுதியில் இளம் பெண்ணொருவர் தனது நண்பர்கள் 3 பேருடன் வெளியில் செல்வதற்காக வாடகை கார் ஒன்றை பதிவு செய்து பயணித்துள்ளனர். இளம் பெண்ணும், அவரது நண்பர்களுக்கும் காரில் இருந்தவாறே புகைப்பிடித்தமையால் சாரதி உடனே காரை நிறுத்தி அவர்களை கண்டித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த பெண் மற்றும் நண்பர்கள் அவருடன் வாக்குவாதம் செய்துள்ளனர். அப்போது அந்த வழியாக வந்த பொலிஸார் விசாரணை நடத்திய போது தனக்கு சாரதி பாலியல் தொல்லை கொடுத்ததாக அந்த பெண் கூறியுள்ளார்., பெண் உட்பட 4 பேரும் காரில் புகைப்பிடித்ததாக கார் சாரதி புகார் அளித்தார். 2 பேரிடமும் பொலிஸார் தனித்தனியே புகாரை பெற்று கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தாதியின் உடலை துண்டு துண்டாக வெட்டி பிரிட்ஜில் அடைத்த வாலிபர்

தெலுங்கானா

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் தராபத் மல்கப் பேட்டையை சேர்ந்தவர் அனுராதா (வயது 55). இவர் அங்குள்ள தனியார் வைத்தியசாலையில் தாதியாக வேலை பார்த்து வந்துள்ளார். ஐதராபாத் மலைக் பேட்டையை சேர்ந்தவர் சந்திர மவுலி. வியாபாரம் செய்து வருகிறார். இவரது தந்தையை சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலையில் சேர்த்தார். அப்போது அனுராதாவுடன் அவரது தந்தைக்கு பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் அது கள்ளக்காதலாக மாறியது.

சந்திரமவுலி குடும்பத்தினர் தாதி அனுராதா உடன் சகஜமாக பழகியுள்ளனர். ஒன்லைன் வர்த்தகத்தில் சந்திரமவுலிக்கு நஷ்டம் ஏற்பட்டது. இதனால் அனுராதாவிடம் ரூ.7 லட்சம் கடன் வாங்கியுள்ளார். இந்நிலையில் கொடுத்த கடனை திருப்பித் தருமாறு சந்திரமவுலிக்கு நெருக்கடி கொடுத்து வந்ததால் அனுராதாவை தீர்த்துக்கட்ட முடிவு செய்துள்ளார்.

சம்பவத்தன்று சந்திர மவுலி அனுராதா வீட்டிற்கு சென்று வீட்டில் தூங்கிக் கொண்டு இருந்த அனுராதாவை சரமாரியாக தாக்கிய போது அவர் உயிரிழந்துள்ளார்.

பின்னர் அனுராதாவின் உடலில் இருந்து தலையை தனியாக துண்டித்து உடல் பாகங்களை துண்டு துண்டாக வெட்டி, அனைத்து உடல் பாகங்களையும் பிரிட்ஜில் அடைத்துள்ளார். பின்னார் துண்டிக்கப்பட்ட தலையை ஒரு பிளாஸ்டிக் கவரில் அடைத்து திகலகுடா, மூசி ஆற்றின் கரையில் வீசிவிட்டு வந்துள்ளார். பின்னர் தாதி அனுராதா திடீரென மாயமாகி விட்டதாக அவரது குடும்பத்தினரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த 6 நாட்களுக்கு முன்பு ஆற்றுப்பகுதிக்குச் சென்ற ஒருவர் பிளாஸ்டிக் கவரில் தலை இருப்பதை கண்டு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளார். பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து அழுகிய நிலையில் இருந்த தலையை மீட்டனர். கேமராவில் பதிவாகிய சந்தேகத்திற்கு இடமாக சுற்றித்திரிந்த சந்திர மவுலியை பொலிஸ் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தியுள்ளனர். விசாரணையில் அனுராதா கடனை திருப்பி கேட்டதால் கொலை செய்ததை ஒப்புக்கொண்டார். அதன்பின்னர் சந்திர மவுலியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

### இன்று ஆரம்பிக்கிறது ஐந்தாவது டெஸ்ட்:

# தொடரைக் கைப்பற்றுமா அவுஸ்திரேலியா?

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியானது ஓவலில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இத்தொடரை அவுஸ்திரேலியா ஏற்கெனவே தக்க வைத்துள்ள போதும் இப்போட்டியில் வென்றால் 2001ஆம் ஆண்டுக்குப் பின்னர் இங்கிலாந்தில் தொடரைக் கைப்பற்றலாமென்ற நிலையில் அதற்கு அவுஸ்திரேலியா முயலும்.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்த வரையில் மிற்செல் மார்ஷ் உடற்றகுதியுடன் இருந்தால் கமரொன் கிறீனை சுழற்பந்துவீச்சாளர் டொட் மேர்பி பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதோடு, உபாதையால் மிற்செல் ஸ்டார்க் விளையாட முடியாமல் போகும் பட்சத்தில் அவருக்குப் பதிலாக மைக்கல் நேஸர் களமிறங்குவாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



மறுபக்கமாக இங்கிலாந்தைப் பொறுத்த வரையில் கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட்டுக்குப் பதிலாக ஜொஷ் டொங்க், ஒலி றொபின்ஸன் களமிறங்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

# ஆறாமிடத்துக்கு முன்னேறிய ஜடேஜா

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் ஆறாமிடத்துக்கு இந்தியாவின் இரவீந்திர ஜடேஜா முன்னேறியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது போட்டியில் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே ஏழாவது இடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவிச்சந்திரன் அஷ்வின், 2. ககிஸோ றபாடா, 3. பற் கமின்ஸ், 4. ஜேம்ஸ் அன்டர்சன், 5. ஷகீன் ஷா அஃப்ரிடி, 6. இரவீந்திர ஜடேஜா, 7. பிரபாத் ஜெயசூரிய, 8. ஸ்டூவர்ட் ப்ரோட், 9. ஒலி றொபின்ஸன், 10 நேதன் லையன்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

கேன் வில்லியம்ஸன், 2. மர்னுஸ் லபுஷைன், 3. ஜோ றூட், 4. ட்ரெவிஸ் ஹெட், 5. பாபர் அஸாம், 6. ஸ்டீவ் ஸ்மித், 7. டரைல் மிற்செல், 8. உஸ்மான் கவாஜா, 9. திமுத் கருணாரத்ன, றோஹித் ஷர்மா.



முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. பென் ஸ்டோக்ஸ், 5. அக்ஸர் பட்டேல்.



### கராத்தே தரப்படுத்தல் பரீட்சையில் சித்தியடைந்த

# கறுப்புப் பட்டி வீரர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

அஸ்ஹர் இப்றாஹிம்

கராத்தே தரப்படுத்தல் பரீட்சையில் அண்மையில் நடைபெற்றபோது சித்தியடைந்த சர்வதேச தற்காப்புக் கலைகள் சங்கத்தின் இலங்கைக் கிளையின் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கிளையின் தலைமைப் பயிற்சி நிலையமான சாய்ந்தமருது ஹொன்பு டொஜோவில் சங்கத்தின் பிரதம போதனாசிரியரும், இலங்கைக்கான பிரதிநிதியுமான முகம்மத் இக்பால் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் Black Belt 3rd Dan, 2nd Dan, 1st Dan, Shodan-Ho, 1st Kyu ஆகிய தரங்களில் சித்தியடைந்தவர்களுக்கு IMA சான்றிதழ்கள் மற்றும் Sri Lanka Karate do Federation இன் டிப்ளோமா சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டது.

அத்துடன் நான்கு புலன்களினால் சாதனை படைத்ததன் காரணமாக Cholan World Record புத்தகத்தில் தனது பெயரை பதிவு செய்த எம். எஸ்.எம். பர்ஸான் மற்றும் தேசிய கராத்தே அணியில் இடம்பிடித்த ஏ.கே.எம். ஹஸ்னத் கான் ஆகியோருக்கு விசேட விருதுகள் வழங்கப்பட்டது.

# சமநிலையில் பரிஸ் ஸா ஜெர்மைன்- அல் நஸார் போட்டி

ஜப்பானில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுக்கும், சவுதி அரேபியக் கழகமான அல் நஸாருக்குமிடையிலான சிநேகபூர்வப் போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதேவேளை, இத்தாலியில் நடைபெற்ற அந்நாட்டு சீரி ஏ கழகமான உடினுஸுடனான



போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான ஆர்.பி லெய்ப்ஸிக் தோல்வியடைந்தது.

# ஐந்தாவது சுற்றுப்பாதைக்குள் சந்திராயன்-3

சந்திராயன்-3 விண்கலம் கடந்த ஜூலை 14 ஆம் திகதி நிலவை நோக்கி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது. பூமியின் சுற்றுப்பாதையில் சுற்றிவரும் இந்த சந்திராயன்-3 விண்கலத்தை 4 முறை சுற்றுப்பாதைகளுக்கு உயர்த்தப்பட்ட நிலையில் 5-வது சுற்றுப்பாதைக்கு உயர்த்த திட்டமிடப்பட்டிருந்தது.

அதன்படி சந்திராயன்-3 விண்கலத்தின் நிலவை நோக்கிய பயணத்தில் 5-வது சுற்றுவட்டப்பாதைக்கு வெற்றிகரமாக உயர்த்தப்பட்டுள்ளதாக இஸ்ரோ விண்வெளி மையம் தெரிவித்துள்ளது.


விண்கலம் நிலவை நோக்கி உயர்த்தப்பட்டதில் 236 கிலோ மீட்டர் சுற்றுப்பாதையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என ட்விட்டரில் இஸ்ரோ தெரிவித்துள்ளது. மேலும் சந்திராயனின் அடுத்த உயர்த்துதல் ஆகஸ்ட் 1 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் 1 மணிக்குள் திட்டமிடப்பட்டுள்ளது.

# அலைபேசி திருடனிடம் மனதை பறிகொடுத்த பெண்

பிரேசிலை சேர்ந்த இளம் பெண்ணொருவர் தனது அலைபேசியுடன் வெளியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது இளைஞன் ஒருவர் அந்த அலைபேசியை பறித்து கொண்டு ஓடியுள்ளார்.

திருடிக்கொண்டு ஓடிய இளைஞன் என்ன வகையான அலைபேசியை திருடியுள்ளேன் என்பதை பார்க்க, அதனை இயக்கியுள்ளார். அதில் இளம் பெண்ணொருவரின் புகைப்படம் இருந்துள்ளது. அழகான பெண்ணிடம் திருடி தப்பு செய்துவிட்டோமே என்று வருந்தியுள்ளார்.

திரும்பி வந்த இளைஞன் அந்த பெண்ணிடம் மன்னிப்புகேட்டு அலைபேசியை திருப்பி கொடுத்து உள்ளார். அதனால், அந்த இளம்



பெண்ணுக்கு அந்த நபரை பிடித்து போய்விட்டது. அப்பெண்ணோ இளைஞனின் இதயத்தை திருடி விட்டார்.

கடந்த இரண்டு வருடங்களாக இருவரும் காதலித்து வருகிறார்கள். இது குறித்து காதல் ஜோடி பேட்டி அளித்து உள்ளனர். இந்த வீடியோவை ஒரு பிரேசில் ஊடகவியலாளர் தனது டுவிட்டர் பக்கத்தில் பிரேசிலில் மட்டுமே இப்படியெல்லாம் நடக்கும் என்று பதிவிட்டு உள்ளார்.


**திருடிக்கொண்டு ஓடிய இளைஞன் என்ன வகையான அலைபேசியை திருடியுள்ளேன் என்பதை பார்க்க, அதனை இயக்கியுள்ளார்**

# காதலை வெளிப்படுத்திய மகிழ்ச்சியில் நேர்ந்த சோகம்

துருக்கி

போலண்ட் கேப், துருக்கி நாட்டின் வடமேற்கே போலண்ட் கேப் பகுதியில் வசித்து வருபவர் நிஜாமதீன் குர்சு. இவர் எசிம் டெமிர் (வயது 39) என்பவரிடம் தனது காதலை வெளிப்படுத்தி இருக்கிறார். இதனை தொடர்ந்து, சமீபத்தில் இந்த இளம் ஜோடிக்கு திருமண நிச்சயதார்த்தம் நடந்தள்ளது.

அதனை கொண்டாட



முடிவு செய்த அவர்கள் மலை பகுதிக்கு காரில் சென்றுள்ளனர். பின்னர் மலை உச்சிக்கு ஏறி சென்ற அவர்கள் உணவு மற்றும் மதுபானம் குடித்து கொண்டாடியுள்ளனர். இதன்பின்பு, சுற்றுலா செல்லலாம் என முடிவு செய்து குர்சு தனது காருக்கு திரும்பியுள்ளார்.

ஆனால், அவரது காதலி டெமிர் அவருடன் வரவில்லை. அப்போது, திடீரென பலத்த சத்தம் கேட்டுள்ளது. இதனால், உடனடியாக அவர் மலை பகுதிக்கு சென்று பார்த்துள்ளார். அங்கு அவரது வருங்கால மனைவி மலையில் இருந்து 100 அடி பள்ளத்தில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

# ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் வடகொரியாவுக்கு திடீர் பயணம்

மாஸ்கோ, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கே சொய்கு மற்றும் அந்நாட்டு இராணுவ குழுவினர், வடகொரியா நாட்டுக்கு 3 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ளனர். இதன்படி, சுனான் சர்வதேச விமான நிலையத்திற்கு சென்றடைந்த அவரை வடகொரிய பாதுகாப்பு அமைச்சர் காங் சுன்-னாம் வரவேற்றார்.

கொரிய போர் நிறைவடைந்த 70-வது ஆண்டு கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் ரஷ்ய குழு பங்கேற்க உள்ளது. இந்த பயணம் இரு நாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்த உதவும் என அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய அமைச்சரின் பயணம் முக்கியத்துவம் பெறுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை, 27 ஜூலை 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.